[8th September 1970

நிலுவையாக உள்ள விற்பனை வரித் தொகை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-வணிக வரி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) இம்மாநிலத்தில் 1970 மார்ச் 31-ஆம் நாளன்று நிலுவையாக உள்ள மொத்த விற்பனை வரித் தொகை எவ்வளவு ?

(இ) அந்த நிலுவையை வசூலிக்க அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள் யாவை ?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : (*a*) Rs. 9,88,26,459/-.

(*b*) The Commercial Taxes Acts themselves contain provisions for the recovery of the arrears. Out of the above sum, a sum of Rs. 7.05 crores is covered by appeals, revisions, writ petitions, stay, insolvency petitions, waiver, suits, non-expiry of notice time and write off proposals. The effective balance is Rs. 2.83 crores. The arrear position is periodically reviewed by the Board and Government. The Board of Revenue (Commercial Taxes) has also been instructed to take special efforts to collect the arrears early.

திரு. ஜி. சுவாமிநாதன் : அமைச்சர் பதிலிலிருந்து நிலுவையாக நிற்பது கிட்டத்தட்ட ரூ. 9 கோடி அளவில் இருக்கிறது. மொத்தம் இதன் மூலமாக வருவது எவ்வளவு ? அதில் ரூ. 9 கோடி எவ்வளவு சதவிகிதம் ?

மாண்புமிகு திரு. பி.யு. சண்முகம் : ரூ. 9 கோடி 88 லட்சம் நிலுவை என்று சொன்னால், அதில் ரூ. 7 கோடி அளவுக்கு அதிகமாக நீதி மன்றத்தில் விசாரணையின் இருப்பதால், அவை நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றன. ரூ. 2 கோடி 85 லட்சம் அளவுக்கு பாக்கி இருக்கிறது. அதையும் சீக்கிரம் வசூலிக்க உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : எத்தனை ஆண்டாக அது பாக்கியாக இருக்கிறது ?

மாண்புமிகு திரு. பி.யு. சண்முகம் : தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

Paper Manufacturing Industry

*84. THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal to set up a paper manufacturing industry in Tamil Nadu ; and

(*b*) if so, the details thereof ?

8th September 1970]

காகிதத் தொழிற்சாலை

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழ் நாட்டில் புதிதாகக் காகிதத் தொழிற்சாலை துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) காகித உற்பத்தியைக் கணிசமான அளவில் அதிகரிக்க வேண்டி பொதுத் துறையில் சில காகித ஆலைகள் கட்ட உதவும் பொருட்டு ஒரு காகித கார்ப்பரேஷனை நிறுவ இந்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இருந்தபோதிலும் காகிதத் தட்டுப்பாடு, விலை ஏற்றம் ஆகிய பிரச்னைகளுக்கு ஏற்கெனவே உள்ள காகித ஆலைகளில் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலமாகவும் புது காகித ஆலைகளை நிறுவு வதன் மூலமாகவுமே தீர்வு காண முடியும் என்று அது கருதுகிறது. இந்த வகையில் ஒத்துழைக்கும்படி இந்திய அரசு தமிழக அரசைக் கோரியுள்ளது. தமிழக அரசு அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறது. தற்போது அரசாங்க காடுகளில் கிடைக்கும் மூங்கில், மிலாறு, ரசக் கற்பூர மரம், ஈடாரிட் என்னும் நாணல்வகை ஆகிய மூலப் பொருள் கள் ஏற்கெனவே தமிழ்நாட்டில் உள்ள காகித ஆலைகளின் தேவைக்கு மட்டுமே போதுமானதாய் உள்ளன. புது ஆலையொன்றைத் துவக்கப் போதுமான அளவு மூலப் பொருள்கள் மிச்சமிராது. ஆகவே காடு களை வளர்க்க ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து மரங்களை வளர்ப்பதன் மூலம் கிடைக்கும் மூலப் பொருள்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்துறையில் புது ஆலையொன்றை நிறுவும் திட்டமொன்றை தமிழக அரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது.

திரு. எஸ். ராகவானந்தம் : பொதுவாக மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் வேலை வாய்ப்பு அதிகம் இல்லாததால், அங்கேயிருந்து வருகிற தொழிலாளிகள் இங்கே மிகவும் அவதிப்படுகிறார்கள். நாகப்ப செட்டியார் போன்றவர்கள் இதைப் போன்ற தொழிலாளிகளை அமர்த்தி பதினைந்து ரூபாய் கொடுத்து சோறு போட்டு வைத்திருந்துவிட்டு பிறகு விரட்டி விடுகிறார்கள். தினந்தந்தி, மாலைமுரசு நடத்துபவர்கள் கூட அப்படித்தான் செய்வதாகக் கேள்வி. ஆகையால் எந்தத் தொழிற் சாலை ஆரம்பிப்பதாக இருந்தாலும், ராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த அரசு ஆரம்பிக்குமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : எங்கள் மாவட்ட மக்கள் சார்பில் உறுப்பினருக்கு நன்றி.